# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2406 - 2024 ඔක්තෝබර් මස 11 වැනි සිකුරාදා - 2024.10.11

*2406 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1982 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1987 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1984 | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*.'ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1981-B 82617-405 (2024/ 10)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## சுற்றுலா மற்றும் காணி அமைச்சு

## இலங்கை நில அளவைத் திணைக்களம்

## விலைமனுக்கோரல்

### பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் -2025

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களிற்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக்கோரல்கள் 2024.10.28ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக்கோரல்கள் பி.ப. 2.00 மணிக்குத் திறக்கப்படும்.

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | கேள்வி மனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | தேவைப்படும் திகதி | வீடு தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| மேல் மாகாணம் | கம்பஹா | அத்தனகல்ல | மாகாண சர்வேயர் ஜெனரல் ( மேல் மாகாணம்) மாகாண சர்வேயர் ஜெனரல் அலுவலகம், கொழும்பு 05 | அத்தனகல்லவைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2025.01.01 | இரண்டு ஆண்டுகளுக்கு |
| சப்பிரகமுவ மாகாணம் | கேகாலை | ருவன்வெல்ல | மாகாண சர்வேயர் ஜெனரல் ( சப்பிரகமுவ மாகாணம்) மாகாண சர்வேயர் ஜெனரல் அலுவலகம், நவநகரம், இரத்தினபுரி. | ருவன்வெல்லவைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2025.01.01 | இரண்டு ஆண்டுகளுக்கு |
| கிழக்கு மாகாணம் | மட்டக்களப்பு | களுவாஞ்சிக்குடி | மாகாண சர்வேயர் ஜெனரல் ( கிழக்கு மாகாணம்) மாகாண சர்வேயர் ஜெனரல் அலுவலகம், திருகோணமலை | களுவாஞ்சிக் குடியைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2024.11.01 | இரண்டு ஆண்டுகளுக்கு |
| தென் மாகாணம் | மாத்தறை | கொட்டபொல | மாகாண சர்வேயர் ஜெனரல் ( தெற்கு மாகாணம்) மாகாண சர்வேயர் ஜெனரல் பொது அலுவலகம், காலி. | கொட்டபொலவைச் சுற்றியுள்ள நகரங்கள் | 2025.02.16 | இரண்டு ஆண்டுகளுக்கு |

**பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள்.-**

அனைத்துக் கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பிவேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு

இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொறுத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தது மூன்று வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகள் மற்றும் வாகன தரிப்பிட வசதிகள் இருக்க வேண்டும். எல்லைக்கற்கள் தயாரிப்பதற்கான இட வசதி இருப்பதோடு ஆகக் குறைந்தது பத்து அலுவலர்கள் இருக்கக்கூடிய அறை அல்லது இட வசதிகள் இருக்க வேண்டும். கட்டிடத்தின் பரப்பளவு குறைந்தது 2500 சதுர அடி அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பூரணப்படுத்த வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையில் இடது பக்க மேல் மூலையில் "பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்கு பெறுதல் ( இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு 2024.10.28 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.

டபிள்யூ. சுதத் எல்.சீ. பெரேரா.
நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம்,
இலக்கம் 150, பெர்னாட் சொய்சா மாவத்தை, கொழும்பு -05,
2024.10.03.

## பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் -2024

## விலைமனுக்கோரல் விண்ணப்பப்படிவம் - 2024

கட்டிட உரிமையாளருக்காக.-

1. முழுப்பெயர்:
2. முகவரி:
3. தொலைபேசி இலக்கம் :
4. தேசிய அடையாள அட்டை இலக்கம்:

கட்டிடம் தொடர்பாக.-

1. எந்த பிரதேச நிலஅளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டள்ளது ? :
2. மாதாந்த வாடகைத் தொகை ?:
3. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி ?:
4. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி.மீ.:
5. இடத்தின் விஸ்தீரணம்:
6. கட்டிடத்தின் விஸ்தீரணம் வர்க்க அடியளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள்:
7. தனியாக அவதானிக்கக்கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா?:
8. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா?:
9. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் ( மதில்/கம்பி/வேலி/..........) :
10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை:
11. தொலைபேசி தொடர்பு உள்ளதா ? :

மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல் தவறானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலை மனு நிலஅளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகின்றேன்.

....................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

10-89

# பொருட்கள்விற்பனவும் பிறவும்

## மாவட்ட /நீதிவான் நீதிமன்றம் - வவுனியா

### நீதிமன்றினால் அரசுடமையாக்கப்பட்ட சான்றுப்பொருட்களின் ஏல விற்பனை

வவுனியா நீதிவான் நீதிமன்றினால் பின்வரும் வழக்குகளில் அரசுடமையாக்கப்பட்ட சான்றுப்பொருட்களை 2024.10.26 ஆந் திகதி வவுனியா நீதிமன்ற வளாகத்தில் வைத்து மு.ப. 9.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

01. யாராவது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சான்றுப்பொருட்களினை ஏதாவது உரிமை கோருமிடத்து விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு தமது கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

02. பொது மக்கள் மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் விற்பனைக்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு சான்றுப்பொருட்களை பார்வையிடலாம்.

03. ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏதாவது சான்றுப்பொருட்களின் விலை கிடைக்காதவிடத்து அவ் சான்றுப்பொருட்களின் மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

04. விற்கப்பட்ட சான்றுப்பொருட்களின் பணத்தை உடன் செலுத்தி சான்றுப்பொருட்களை உடனடியாக நீதிமன்ற வளாகத்தில் இருந்து அகற்ற வேண்டும். எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செலுத்தப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

05. சான்றுப் பொருட்களை கொள்வனவு செய்வோர் தேசிய ஆளடையாள அட்டையுடன் சமுகமளிக்க வேண்டும்.

யூ.எல். வசீம் அஹமட்,
மாவட்ட நீதிபதி/நீதிவான்.

மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்.
வவுனியா.

**ஏல விற்பனைக்கான சான்றுப்பொருள் மற்றும் பெறுமதி தொடர்பான விபரம்.**

| தொடர் இல. | வழக்கு இல. | சான்றுப்பொருள் இல. | சான்றுப்பொருள் விபரம் | இலக்கம் | பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 01 | AR/415/24 | — | Lumala ladies | 69976021 | 600.00 |
| | AR/415/24 | — | Tomahawk ladies | — | 400.00 |
| | AR/415/24 | — | Lumala ladies | — | 500.00 |
| | AR/415/24 | — | Lumala gents | cc2j8184 | 300.00 |
| | AR/415/24 | — | Lumala ladies | 69893276 | 300.00 |
| | AR/415/24 | — | Lumala ladies | — | 300.00 |
| | AR/415/24 | — | Lumala gents | 69774023 | 800.00 |
| | AR/415/24 | — | Lumala gents | 695805 | 500.00 |

| தொடர் இல. | வழக்கு இல. | சான்றுப்பொருள் இல. | சான்றுப்பொருள் விபரம் | இலக்கம் | பெறுமதி |
|---|---|---|---|---|---|
| | AR/415/24 | — | Lumala gents | — | 500.00 |
| | AR/415/24 | — | Lumala gents | 69989498 | 300.00 |
| | AR/415/24 | — | Lumala gents | — | 1,000.00 |
| | AR/415/24 | — | Lumala ladies | — | 300.00 |
| | AR/415/24 | — | Lumala gents | 6979880 | 1,000.00 |
| | AR/415/24 | — | Lumala ladies | — | 300.00 |
| | AR/415/24 | — | Lumala gents | — | 500.00 |
| | AR/415/24 | — | Lumala ladies | — | 1,000.00 |
| 02 | AR/1430/18 | PR/15/18 | DVD | — | 200.00 |
| 03 | AR/481/19 | PR/78/19 | Ahuja Box | — | 500.00 |
| 04 | AR/1407/20 | PR/2033/18 | Helmat | — | 50.00 |
| 05 | AR/1556/20 | PR/1465/19 | Phone | — | 500.00 |
| 06 | AR/1554/20 | PR/391/20 | Phone | — | 500.00 |
| 07 | AR/1408/20 | PR/261/20 | Phone | — | 200.00 |
| 08 | AR/1411/19 | — | Phone | — | 500.00 |
| 09 | AR/1739/21 | (i) PR/1811/21 | Lumala Ladies | — | 800.00 |
| | AR/1739/21 | (ii) PR/1811/21 | Lumala gents | — | 1,000.00 |
| 10 | AR/2132/23 | (i) PR/835/23 | Ladies Cycle | — | 800.00 |
| | AR/2132/23 | (ii) PR/836/23 | Gents Cycle | — | 1,000.00 |
| | AR/2132/23 | (iii) PR/840/23 | Ladies Cycle | — | 800.00 |
| 11 | AR/2279/23 | PR/317/23 | Motor | — | 1,000.00 |
| 12 | AR/2280/23 | PR/287/23 | Motor | — | 2,000.00 |
| 13 | AR/2278/23 | PR/286/23 | Motor | — | 1,000.00 |
| 14 | 45539 | PR/146/21 | WP/BET/8701 FAZER | — | 100,000.00 |
| 15 | AR/619/20 | PR/321/20 | Fishing canoes 03 | — | 6,000.00 |
| | AR/619/20 | PR/322/20 | — | — | 6,000.00 |
| | AR/619/20 | PR/323/20 | — | — | 6,000.00 |

**நீதிவான் நீதிமன்றம் - யாழ்ப்பாணம்**

**நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான சான்றுப்பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை**

01.யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றினால் பின்வரும் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான சான்றுப்பொருட்கள் 2024.10.26 ஆந் திகதி இந் நீதிமன்ற வளாகத்தில் வைத்து காலை 9.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

02. எவரேனும் ஒருவர் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சான்றுப்பொருட்களை உரிமை கோருமிடத்து அவர் விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு தமது கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

03. பொது மக்கள் மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் விற்பனைக்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு சான்றுப்பொருட்களினைப் பார்வையிடலாம்.

04. ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள சான்றுப்பொருட்களின் மதிப்பு விலை கிடைக்காதவிடத்து அப் பொருட்ளின் ஏல விற்பனையை மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

05. விற்கப்பட்ட சான்றுப்பொருட்களுக்கான பணத்தினை உடனே செலுத்தி அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும். சகல கொடுப்பனவுகளும் காசாகவே செலுத்தப்படல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

05. சான்றுப் பொருட்களை கொள்வனவு செய்வோர் தேசிய ஆளடையாள அட்டையுடன் சமுகமளிக்க வேண்டும்.

ஏ.ஏ. ஆனந்தராஜா,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்.
யாழ்ப்பாணம்,
2024.10.07.

**பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான சான்றுப்பொருட்களின் விபரங்கள்**

| தொ.இல. | வழக்கு இல. | சான்றுப்பொருள் இல. | பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | AR/472/24 | 1 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 2 | | 2 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 3 | | 3 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 4 | | 4 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 5 | | 5 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 6 | | 6 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 7 | | 7 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 8 | | 8 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 9 | | 9 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 10 | | 10 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 11 | | 11 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 12 | | 12 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 13 | | 13 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 14 | | 14 | துவிச்சக்கர வண்டி | 01 |

| தொ.இல. | வழக்கு இல. | சான்றுப்பொருள் இல. | பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 15 | AR/472/24 | 15 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 16 | | 16 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 17 | | 17 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 18 | | 18 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 19 | | 19 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 20 | | 20 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 21 | | 21 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 22 | | 22 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 23 | | 23 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 24 | | 24 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 25 | | 25 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 26 | | 26 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 27 | | 27 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 28 | | 28 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 29 | | 29 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 30 | | 30 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 31 | | 31 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 32 | | 32 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 33 | | 33 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 34 | | 34 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 35 | | 35 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 36 | | 36 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 37 | | 37 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 48 | | 38 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 39 | | 39 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 40 | | 40 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 41 | | 41 | துவிச்சக்கர வண்டி | 01 |

*10- 124*

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், கீழ்க்காணும் கம்பனி 2024, செத்தெம்பர் 20 ஆந் திகதி கூட்டிணைக்கப்படுவதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

*கம்பனியின் பெயர்* : விலா வெல்துய்யன் ( பிரைவட்) லிமிட்டட்
*கம்பனிப் பதிவு இல.*: PV 00310237
*பதிவு அலுவலக முகவரி* : 22/8F, பீல்ட்வீவ் ரோட், நலகஸ்தெனிய, ஹிக்கடுவ

சபையின் கட்டளைப் பிரகாரம்,

மின்னேரிபிட்டியகே தொன் சார்கா மனிஷா
கருணாரத்ன ,
கம்பனிச் செயலாளர்.

97/A, கடவத்த வீதி,
களுபோவில.

*10-59*

**அறிவித்தல்**

*கலைப்பாளரை நியமனம் செய்தல் தொடர்பான அறிவித்தல்*

*எஸ் எஸ் செக்கியூரிட்டி சர்விஸஸ் ( பிறைவட்) லிமிடட்(பி.வீ. 12368)*

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கலைப்பு செய்தல் தொடர்பான விடயத்தில்*

வழக்கு இல.: CHC/37/2023/ CO

*கலைப்பு செய்தல் கட்டளை வழங்கப்பட்ட திகதி: 2023.11.22*

*மேல் மாகாண வர்த்தக நீதிமன்றத்தினால் 2024.06.24 ஆந் திகதியின் கட்டளையின் பிரகாரம் கட்டுகஸ்தொட, ஹமங்கொட, இல. 35 பீ எனும் முகவரியில் குடியிருக்கும் ஜனக விஜயரத்ன ரிட்டிகஹபொல என்பவர் மேற்குறிப்பிட்ட நிறுவனத்தில் கலைப்பாளர் என்ற வகையில் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.*

*10-60*

---

**பொது அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(4) ஆம் பிரிவிற்கிணங்க கம்பனியின் நிலவரத்தின் மாற்றத்தின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பாக 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவின் பிரகாரம் நாம் இவ்வறிவித்தலை வழங்குகின்றோம்.*

*கம்பனியின் முன்னைய பெயர்* : கிறீன் கோட் அர்க்கிட்டேக்ட்ஸ் எல்டிடி

*கம்பனியின் பதிவிலக்கம்:* பிவி 00271985

*பதிவு முகவரி* : இல.33-6/4 (யூனிட் 5A), பலபொகுண வீதி, கொழும்பு 05

*கம்பனியின் புதிய பெயர்* : கிறீன் கோட் அர்க்கிட்டேக்ட்ஸ் ( பிரைவேட்) லிமிடெட்

சபையின் கட்டளைப் பிரகாரம்,

கல்ரூப்கோ மேனேஜ்மென்ட் செர்விக்ஸ்
( பிரைவேட்) லிமிடெட்.

*2024,* ஒகத்து *15.*

*10-61*

---

***செரன்டிப் எஞ்ஜினியரிங் குரூப் பீஎல்சி ( PQ 230)***

**பொது மக்களுக்கான அறிவித்தல்**

*2001, திசெம்பர் 18 ஆந் திகதிய 1215/ 2 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட* SEC *விதிகளின் 5(2)* (a) *விதியில் வரையறுக்கப்பட்டவாறு விசேட தீர்மானங்களின் வடிவில் 2024, செத்தெம்பர் 30 ஆந் திகதி நடாத்தப்பட்ட விசேட பொதுக் குழுக் கூட்டம் ஒன்றில் நிறுவனத்தின் பங்குதாரர்களினால் முறையாக அங்கீகரிக்கப்பட்ட பின்வரும் தீர்மானம் தொடர்பில் பொது மக்களுக்கு விடுக்கும் அறிவித்தல்.*

*01.* "அதன்படி பங்கு ஒன்று இலங்கை ரூபா மூன்று சதம் எண்பது (இ.ரூபா 3.80) விலை ஒன்றில் செரன்டிப் ஹோல்டிங்ஸ் Pte. Ltd. *மூலம் வாங்கப்பட்டு பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு தமது பங்குகளை விற்பதற்கு விரும்பும் எந்த ஒரு பங்குதாரர்களின் பங்குகள் மற்றும் 2001, திசெம்பர் 18 இன் 1215/2 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவாறு இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விதிகளின் 5 ஆவது விதிகளின்படி, இவ்வாறான நோக்கத்திற்காக நிறுவனத்தினால் மேற்கொள்வதற்கு கொழும்பு பங்குச் சந்தையின் உத்தியோகபூர்வ பட்டியலில் இருந்து செரன்டிப் எஞ்ஜினியரிங் குரூப் பீஎல்சி ("நிறுவனம்") இன் சாதாரண பங்குகள் பட்டியல் நீக்கம் செய்யப்படுகின்றன."*

*02. அதன்படி 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் "செரன்டிப் எஞ்ஜினியரிங் குரூப் பீஎல்சி" இடமிருந்து "செரன்டிப் எஞ்ஜினியரிங் குரூப் லிமிடெட்டுக்கு" நிறுவனத்தின் பெயர் மாற்றப்பட்டு கொழும்பு பங்குச் சந்தையின் உத்தியோகபூர்வ பட்டியலில் இருந்து பங்குகளை பட்டியல் நீக்கும் பொருட்டு பொது பட்டியலிடப்பட்ட நிறுவனத்தில் இருந்து பொது நிறுவனம் ஒன்றாக அதன் நிலையை இந்த நிறுவனம் மாற்றியதாக கருதப்படும்.*

*10-103*

## 1995, யூன் 16 ஆந் திகதிய 875/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டதும் 2003, யூலை 29 ஆந் திகதிய 1299/6 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் திருத்தப்பட்டதுமான (2003 திருத்தத்தில் உள்ளவாறு) 1995 நிறுவன கையகப்படுத்தல் மற்றும் இணைத்தல் விதியின் கீழான அறிவித்தல்

*சியெர்ரா கேபிள்ஸ் பிஎல்சியின் 373,991,364 சாதாரண பங்குகளை வாங்குவதற்கு ஐகோனிக் ட்ரஸ்ட் (பிறைவெட்) லிமிடெட் (பிரவுன்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிஎல்சியின் முழு சொந்தமுடைய துணை நிறுவனம்) மூலம் கட்டாய வழங்கல் மேற்கொள்ளப்படுகிறது.*

### 01. வழங்களுக்கான பின்னணி

*இல.100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய என்ற முகவரியில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைப் பெற்றதும் PV00232531 ஆம் இலக்க கம்பனி பதிவு இலக்கத்தைக் கொண்டதுமான ஐகோனிக் ட்ரஸ்ட் (பிறைவெட்) லிமிடெட் ( பிரவுன்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிஎல்சியின் முழு சொந்தமுடைய துணை நிறுவனம்) ( இதன் பின்னர் அளிப்பைப் பெறுபவர் என்று குறிப்பிடப்படும்) பங்கு ஒன்று தலா ரூபா 8.00 விலையில் அளிப்பவரிடம் உள்ள மொத்த பங்குகளின் தோராயமாக 1.24% இனை, சியெர்ரா கேபிள்ஸ் பிஎல்சி ( இதன் பின் அளிப்பவர் என்று குறிப்பிடப்படும்) 6,654, 899 சாதாரண வாக்கு பங்குகளை, கொழும்பு பங்குச் சந்தையின் ( CSE) வர்த்தகத் தளத்தில், 2024, செத்தெம்பர் 11 ஆந் திகதி வாங்கியது தொடர்பானது: அளிப்பவரின் 30.42% பங்குகளின் (மொத்தம் 163, 521, 066 பங்குகள்) மொத்த வைத்திருப்பு ஒன்றை ஏற்படுத்துகின்ற தற்போதிருக்கும் 156, 866, 167 பங்குகளுடன் ( அளிப்பவர் பங்குகளின் மொத்த எண்ணிக்கையின் 29.18% ) சேர்ந்தது.*

*கட்டாய வழங்கல் ஒன்றை செய்வதற்கு கடப்பாடு பெற்றுள்ள, ( கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) விதியின் 31(1)(a) சட்ட விதிமுறைகள் மற்றும் திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கையின் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்டத்தின் 53 ஆவது பிரிவின் கீழ் இலங்கையின் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மூலம் மேற்கொள்ளப்பட்ட விதிகளின் கீழ் வெளியிடப்பட்ட , (விதி) திருத்தப்பட்டவாறு) 1995 இன் நிறுவன கையகப்படுத்தல் மற்றும் இணைத்தல் விதியின் மூலம் வைக்கப்பட்ட ஆரம்ப வரம்புகள் அளிப்பைப் பெறுபவரால் தூண்டப்பட்டது.*

### விதிமுறையின் விதி 31(1)(a) பின்வருமாறு கூறுகிறது:

*“ ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் தொடர்ச்சியான பரிவத்தனைகள் மூலும் எந்தவொரு நபரும் பெற்றுக்கொண்ட அல்லது இல்லையேல், பங்குகளை வைத்திருப்பவர்களுடன் ஒன்றிணைந்து பெறப்பட்ட அல்லது இல்லையேல், பங்குகளை வைத்திருப்பவர்களுடன் ஒன்றிணைந்து பெறப்பட்ட அல்லது அவ்வாறான நபருடன் கூட்டில் செயற்படும் நபர்கள் மூலம் பெறப்பட்ட பங்குகள் முப்பது வீதம் அல்லது அதற்கு மேல் வைத்திருக்கும் ஒரு நிறுவனம் வாக்குரிமையை பெற்றிருக்கும்:*

*அவ்வாறான நபர் அல்லது அவருடன் இணைந்து செயற்படும் நபர்கள் பங்குகளை வைத்திருப்பது மற்றும் வாக்களிக்கும் உரிமைகளை மேற்கொள்ளும் சாதாரண பங்குகளின் எந்த ஒரு வகுப்பையும் வைத்திருப்பது இந்த விதிக்கு அமைய வழங்கப்படுவதோடு அவ்வாறான நபர் முப்பத்தைந்து நாட்களுக்குள் நீடிக்கப்படலாம்.”*

*அதன்படி, சாதாராண வாக்கு பங்குகளின் எஞ்சிய உடைமையாளர்கள் மூலம் பங்கு ஒன்றுக்கு 8.00 ரூபா விலையில் அளிப்பவரின் தோராயமான 69.58% கொண்ட மீதமுள்ள 373,991, 364 சாதாரண வாக்கு பங்குகளை வாங்குவதற்கு அளிப்பைப் பெறுபவர் கடப்பாடு பெற்றுள்ளார்.*

*2024, செத்தெம்பர் 11 ஆந் திகதிக்கு உடனடியாக முந்தைய ஓர் ஆண்டு காலப்பகுதியில் அளிப்பவரின் சாதாரண வாக்கு பங்கு ஒன்றுக்காக செலுத்தப்பட்ட உச்ச விலையாக ரூபா 8.00 உள்ளது.*

### 02. வழங்கலின் விதிகள்

*2024, செத்தெம்பர் 11 ஆந் திகதி அளிப்பவரின் பங்குகளை வாங்கிய அளிப்பைப் பெறுபவர் அதனை பங்கு ஒன்று ரூபா 8.00 விலை ஒன்றில் எஞ்சியுள்ள 373,991, 364 சாதாரண வாக்குப் பங்குகளை அளிப்பவரின் பங்குதாரர்களிடம் இருந்து வாங்குவற்கு அளிப்பை பெறுபவர் கூறுவிலையிட்டதோடு அது அளிப்பவரின் பங்கு ஒன்றுக்காக 2023, செத்தெம்பர் 09 ஆந் திகதி தொடக்கம் 2024, செத்தெம்பர் 10ஆந் திகதி வரையான காலத்தில், அளிப்பைப் பெறுபவர் மூலம் செலுத்தப்பட்ட உச்ச விலையாகும்.*

இங்க பிரதிபலிக்கின்றவாறு அளிப்பைப் பெறுபவர் மூலம் மேற்கொள்ளப்படும் வழங்கலானது, வழங்கல் முடிவில் அளிப்பவரின் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்ட அளிப்பவரின் அனைத்து சாதாரண பங்குதாரர்களுக்கும் திறந்திருக்கும்.

**03. அளிப்பைப் பெறுபவரின் அடையாளம்**

அளிப்பைப் பெறுபவர் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2020, திசெம்பர் 30 ஆந் திகதி வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய கம்பனி ஒன்றாக கூட்டிணைக்கப்பட்டிருந்ததோடு பிரவுன்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிஎல்சியின் முழு சொந்தமுடைய துணை நிறுவனமாகும்.

அளிப்பைப் பெறுபவரின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய என்ற முகவரியில் அமைந்துள்ளது.

அளிப்பைப் பெறுபவரின் பணிப்பாளர்கள்–

திரு. கமன்த அமரசேகர,
திரு. கித்சிறி குணவர்தன,
திருமதி சன்ஜீவனி கொட்டகதெனிய,
திரு. பன்துக்க வீரசிங்க.

அளிப்பைப் பெறுபவரின் கூறப்பட்ட மூலதனம் ரூபா 10.இது01 சாதாரண வாக்கு பங்கை பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது.

மூலோபாய முதலீடுகளின் வைத்திருப்பு நிறுவனம் ஒன்றாக செயற்படுவது அளிப்பைப் பெறுபவரின் முக்கிய செயற்பாடாகும். சியெர்ரா கேபிள்ஸ் பிஎல்சியில் பங்குகளை வைத்திருப்பதற்கு அப்பால், பிரவுன்ஸ் டெவலொப்மன்ட் லிமிடெட் (முன்னர் சியெர்ரா டெவலொப்மன்ட் லிமிடெட் என அறியப்பட்டது) மற்றும் சன்சுன் புட்டிக் ஹோடேல்ஸ் லிமிடெட்டின் மொத்த பங்குகள் அளிப்பை பெறுபவருக்கு சொந்தமாகும்.

**04. அளிப்பவர் நிறுவனத்தில் தற்போதுள்ள பங்குதாரர்கள்**

| | |
|---|---|
| (aa) அளிப்பைப் பெறுபவருக்கு சொந்தமான அல்லது அளிப்பை பெறுபவர் கட்டுப்பாட்டில் உள்ள அளிப்பவர் பங்குகளின் எண்ணிக்கை | 163,521, 066 |
| (bb) அளிப்பைப் பெறுபவருடன் கூட்டில் செயற்படும் எந்த ஒரு நபர் மூலமும் கட்டுப்படுத்தப்படும் அல்லது சொந்தமான அளிப்பவர் பங்குகளின் எண்ணிக்கை | இல்லை |
| (cc) வழங்கலை ஏற்பதற்கு எந்த ஒரு பங்குதாரர் மூலமும் பொறுப்பை ஏற்ற அளிப்பை பெறுபவர் வைத்திருக்கும் வகையிலான அளிப்பவர் பங்குகளின் எண்ணிக்கை | இல்லை |

**05. அளிப்பவரின் நிபந்தனைகள்**

மேல் குறிப்பிட்டவாறு, அளிப்பைப் பெறுவதன் பங்கானது 163,521,066 ஆக இருப்பதோடு, இது அளிப்பவரின் 30.42% பங்குகளின் மொத்த வைத்திருப்பு ஒன்றை கொண்டுள்ளது.

விதி 31(2) விதிமுறையின்படி, அளிப்பைப் பெறுபவர் வாக்கு உரிமையின் ஐம்பது வீதத்திற்கு மேல் (50%) வைத்திருப்பதுடன் ஒத்துழைப்பு செயற்பாட்டில் உள்ள நபர்கள் மற்றும் அளிப்பைப் பெறுபவர் காரணமாக பங்குகளை வாங்கியது அல்லது வழங்கல் காலத்தில் அல்லது அதற்கு முன்னர் வாங்குவதற்கு இணங்குவதுடன் சேர்த்து குறித்த பங்குகளை அளிப்பைப் பெறுபவர் ஏற்புகளை பெறும் நிபந்தனையின் கீழ் மாத்திரமே 31 ஆம் இலக்க விதியின் கீழ் வழங்கல் மேற்கொள்ளப்படும்.

"நிபந்தனையற்ற ஏற்றுக்கொள்ளல்" என்பது, "பங்குகளை வாபஸ் பெறுவதற்கான தமது உரிமையை அளிப்பவரின் பங்குதாரர்கள் இழக்கும் அதே நேரம் அனைத்து பங்குகளினதும் கூறுவிலையிடப்பட்ட விலையை அளிப்பைப் பெறுபவர் செலுத்துவதை ஏற்றல் வேண்டும்" எனப் பொருள்படும்.

அளிப்பைப் பெறுபவர் ஏற்றுக்கொள்ளல்களைப் பெறாவிட்டாலும், பெறப்பட்ட எந்தவொரு செல்லுபடியாகும் ஏற்பையும் ஏற்றுக்கொள்வதற்கும் பணம் செலுத்துவதற்கும் அளிப்பைப் பெறுபவர் இதன் மூலம் இணங்குவதோடு, இதன் காரணமாக அளிப்பைப் பெறுபவர் வாக்குரிமைகளின் 50% இற்கு மேற்பட்ட பங்குகளை வைத்துள்ளார்.

ஒரு பங்குதாரரால் " ஏற்றுக்கொள்வது" என்பது உருப்படி 6 இல் கூறப்பட்டுள்ள வழங்கல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் நடைமுறையின்படி ஏற்றுக்கொள்வதைக் குறிக்கும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**06. வழங்கலின் மேலதிக விபரங்கள்**

மேற்கூறிய நிறுவன கையப்படுத்தல்கள் மற்றும் இணைப்புகள் விதியின் அடிப்படையில் வழங்கல் திறந்திருக்கும் காலம் உட்பட ஏனைய தொடர்புடைய தகவல்களை வழங்கும் விரிவான கட்டாய வழங்கல் ஆவணம் ஒன்று கட்டாயம் வழங்களை மேற்கொள்வதற்கான கடப்பாடு பெறுப்பேற்கப்பட்ட திகதியில் இருந்து முப்பத்து ஐந்து (35) நாட்களுக்குள் அளிப்பவரின் அனைத்து பங்குதாரர்களுக்கும் அனுப்பப்படும்.

தபால் தாமதம் அல்லது வேறு ஏதேனும் காரணத்தால் கட்டாய வழங்கல் ஆவணத்தின் பிரதி ஒன்று கிடைக்கப்பெறாத பங்குதாரர்கள், வழங்கல் பதிவாளர்கள், SSP Corporate Services ( Private) Limited. இல. 546/7, காலி வீதி, கொழும்பு 03, தொலைபேசி இல. 011-2573485 /011-2574798 , தொலைநகல்: 011- 2573037 என்ற முகவரியில் இருந்து கட்டாய வழங்கல் ஆவணத்தில் பிரதி ஒன்றை பெற்றுக்கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

இந்த அறிவித்தல் சபையால் பார்த்து அங்கீகரிக்கப்பட்டது என்பதையும் இந்த அறிவித்தலில் தரப்பட்டிருக்கும் விபரங்களில் துல்லியம் மற்றும் முழுமைத்தன்மைக்கான பொறுப்பை கூட்டாக மற்றும் தனிப்பட்ட முறையில் ஏற்போம் என்பதையும் தமக்குத் தெரிந்து வேறு உண்மைகள் இல்லை என்பதோடு தவறாக வழிநடத்தும் எந்த ஒரு அறிக்கையும் நீக்கப்பட்டதை உறுதி செய்தும் அளிப்பைப் பெறுபவரின் பணிப்பாளர்கள் சபை இத்தால் அறிவிக்கிறது.

சபை ஆணைப்படி,

ஐகோனிக் ட்ரஸ்ட் (பிறைவட்) லிமிடட்
கமந்த அமரசேகர,
பணிப்பாளர்.

பண்டுக வீரசிங்க,
பணிப்பாளர்.

2024, செத்தெம்பர் 18 ஆந் திகதி.

10-123